O.S.37-2016

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண். 37/2016

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி அஞ்சலை என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. அஞ்சலை | வயது | : | 65/2026 |
| கணவர் பெயர் | : | இடும்பன் | தாலுகா | : | காரைக்குடி |
| கிராமம் | : | காரைக்குடி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-27.03.2026

பி.வா.சா.1

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கைரேகை என்னுடையதுதான். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை என்னிடம் படித்து காண்பித்தார்கள். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்னுடன் பிறந்தவர்கள் பழனிச்சாமி, வீராச்சாமி, லெட்சுமாயி என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்துக்களில் 1/5 பாகத்தில் வாதி பழனிச்சாமிக்கு பாகம் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அதில் எனக்கும் பாகம் கேட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்.

**8 முதல் 12 பிரதிவாதிகள் மற்றும் 6ம் பிரதிவாதி, 14 முதல் 17 பிரதிவாதிகள் மற்றும் 18 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.